OS.144/2022 நாள் : 11.06.2024

**PW1 குறுக்கு விசாரணை**

வழக்கில் கொடுக்கப்பட்ட கடனின் பெயர் முத்ரா என்றால் சரிதான். முத்ரா கடன் என்பது ஒரு நிறுவனத்திற்குதான் கொடுக்கப்படும் என்றால் சரிதான். அந்த கடனானது அருள்மிகு கோரக்கசித்தர் சீ புட்ஸ் என்ற நிறுவனத்தில் கொடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். ஒரு நிறுவனத்திற்கு கடன் கொடுக்கும்போது அந்த நிறுவனத்தின் ஆவணங்களை சரிபார்க்க வேண்டும் என்றால் சரிதான். பிரகாஷ் என்பவர் நிறுவனம் நடத்துவதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நாங்கள் அந்த நிறுவனத்தை பார்வையிட்டுதான் கடன் கொடுத்தோம் என்றால் சரிதான். யார் எங்களிடம் கடன் கேட்கிறார்களோ அவர்கள் பெயரில்தான் டிடி வழங்கப்படும் என்றால்தொழிலுக்காக வழங்கும்போது எந்த நிறுவனத்தில் பொருள் வாங்குகிறாரோ அவர்கள் பெயரில்தான் டிடி வழங்கப்படும், கடன் வாங்குபவர் பெயரில் வழங்கப்படமாட்டாது. நாங்கள் பிரதிவாதிக்காக கொடுத்த கடனை கோரக்க சித்தர் சீ புட்ஸ் நிறுவனத்திற்குத்தான் கொடுத்தோம். மேற்படி பிரதிவாதிக்கும், கோரக்க சித்தர் சீ புட்ஸ் நிறுவனத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் வங்கியில் பிரதிவாதி கடன் கேட்டு ஆவணங்கள் தாக்கல் செய்த பின்னர் பிரதிவாதிக்கு கடன் கொடுக்காமல் நிராகரிக்கப்பட்டு, பின்னர் நாங்கள் அந்த ஆவணத்தை வைத்துக்கொண்டு மோசடியாக கடன் பெற்றதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு ஒரு அறிவிப்பு எங்கள் வங்கியால் அனுப்பப்பட்டது என்றும், அந்த அறிவிப்பை எங்கள் வங்கிக்கு எடுத்து வந்த பிரதிவாதியிடம் அறிவிப்பு தவறாக அனுப்பப்பட்டது என்றும், அறிவிப்பு பற்றி கவலை கொள்ள தேவையில்லை என்று கூறினோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஏதாவது நிறுவனம் நடத்தி வருகிறாரா என்றால் இல்லை. பிரதிவாதி கோரக்க சித்தர் சீ புட்ஸ் நிறுவனத்திடம் கொள்முதல் செய்ய போகிறேன் என்று எங்கள் வங்கிக்கு புள்ளிவிவரபட்டியல் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதனை வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் டிடி கொடுக்கப்பட்ட நிறுவனமாக கோரக்கசித்தர் சீ புட்ஸ் நிறுவனத்தின் உரிமையாளரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை.

கோரக்க சித்தர் சீ புட்ஸ் நிறுவனத்திற்கு பிரகாஷ் எங்கள் வங்கியில் கொடுத்த ஆவணங்களை வைத்து மோசடியாக டிடி கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி கடனுக்கும், பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல .

**மறு விசாரணை - இல்லை**